பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 07 2024 **MONDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இளநிலை நீட் தேர்வு வினாத்தாள் வெளியானது தொடர்பாக புதன்கிழமைக்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறு மத்திய அரசு மற்றும் தேசிய தேர்வு முகமைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2. தமிழகத்தில் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஏரி, குளம், கண்மாய்களிலிருந்து கட்டணமின்றி விவசாயம் மற்றும் மண்பாண்ட தொழிலுக்கு மண் எடுப்பதற்கான அனுமதியை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

3. தமிழகத்தில் விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

4. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பராமரிப்புப் பணிகளுக்கு பிறகு இரண்டாவது அணு உலையில் இன்று மின் உற்பத்தி தொடங்கியது.

5. தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் திண்டுக்கல் - சேலம் அணிகள் மோதுகின்றன.

*---இனி விரிவான செய்திகள்----*

<<<<<>>>>>>

இளநிலை நீட் தேர்வு வினாத்தாள் வெளியானது தொடர்பாக புதன்கிழமைக்குள் அறிக்கை தாக்கல் செய்யுமாறு மத்திய அரசு மற்றும் தேசிய தேர்வு முகமைக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இளநிலை நீட் தேர்வு முறைகேடு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை இன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட தலைமை நீதிபதி திரு சந்திரசூட், மற்றும் நீதிபதிகள் திரு

பர்திவாலா, திரு மனோஜ் மிஸ்ரா ஆகியோர் கொண்ட அமர்வு, நீட் முறைகேடு புகார்கள் தொடர்பாக நடத்தப்பட்ட புலன் விசாரணையின் தற்போதைய நிலை குறித்த அறிக்கையை தாக்கல் செய்யுமாறு சிபிஐ-க்கும் உத்தரவிட்டுள்ளது.

நீட் தேர்வு முறைகேடுகள் தொடர்பாகவும், இவ்வாண்டு நடத்தப்பட்ட நீட் தேர்வை ரத்து செய்யக்கோரியும் தாக்கல் செய்யப்பட்ட 38 மனுக்கள் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், இவ்வாண்டு இளநிலை நீட் தேர்வை ரத்து செய்துவிட்டு, மறு தேர்வு நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

தலைமை நீதிபதி திரு சந்திரசூட், இந்த தேர்வில் முறைகேடுகள் நடந்திருப்பது சந்தேகத்திற்கு இடமின்றி தெரியவருவதாகவும் அவர் கூறினார்.

கேள்வித்தாள் முன்கூட்டியே வெளியானது உள்ளிட்ட முறைகேடுகளால் இந்த தேர்வு எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை முழுமையாக ஆய்வு செய்த பின்னரே, இதுகுறித்து முடிவெடுக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

<<<<<>>>>>>

தமிழக நீர்வளத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஏரி குளம், கண்மாய்களிலிருந்து விவசாய மற்றும் மண்பாண்டம் பயன்பாட்டிற்கு கட்டணமின்றி களிமண், வண்டல்மண் எடுப்பதற்கான அனுமதியை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

இந்த திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தவர்களுக்கு அனுமதி ஆணைகளை அவர் இன்று வழங்கியதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது

<<<<<>>>>>>

இம்மாதம் ஒன்றாம் தேதி முதல் மத்திய அரசின் மூன்று குற்றவியல் சட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன.

மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப புதிய சட்டங்களை கொண்டுவர வேண்டியது அவசியமாகிறது என்று நாமக்கல்லை சேர்ந்த வழக்கறிஞர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - வழக்கறிஞர் பாபு - 50 செகண்ட்ஸ்*

<<<<<>>>>>>

தமிழகத்தில் விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

வாக்குப்பதிவு நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் 13-ஆம் தேதி எண்ணப்படுகின்றன.

<<<<<>>>>>>

நெல்லை மாவட்டம் கூடங்குளம் அணுமின்நிலையத்தில் பராமரிப்புப்பணிகள் முடிக்கப்பட்டபின், இரண்டாவது அணு உலையில் இன்று மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக, 300 மெகாவாட் என்ற அளவில் மின் உற்பத்தி செய்யப்பட்டு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

*(வாய்ஸ் பைட் - திருமலைக்குமார் - 50 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் தொலைதூர கல்வித் திட்டத்தில் நான்கு புதிய பட்டய படிப்புகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக அதன் துணைவேந்தர் டாக்டர் கீதா லட்சுமி தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தொலைதூர கல்வி இயக்ககத்தின் சார்பில் 44 வகையான ஆறுமாத கால சான்றிதழ் படிப்புகளும் நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - கீதா லட்சுமி – 52 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

தமிழகத்தில் காவல்துறையினருக்கு மாநில அரசு உரிய அதிகாரங்களை வழங்காததால் நாள்தோறும் குற்றச்சம்பவங்கள் அதிகரித்து வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவல்துறையினர் சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்படாததால் கொலை, கொள்ளை சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், அரசியல் கட்சி பிரமுகர்கள் தாக்குதலுக்கு உள்ளாவதாகவும் கூறினார்.

<<<<<>>>>>>

சென்னை பெருநகர காவல்துறை ஆணையராக திரு ஏ. அருண் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை இப்பொறுப்பில் இருந்துவந்த திரு சந்தீப் ராய் ரத்தோர், சென்னை காவல்துறை பயிற்சி கல்லூரியின் தலைமை இயக்குனராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திரு டேவிட்சன் தேவாசிர்வாதம் சென்னை பெருநகர சட்டம் - ஒழுங்கு கூடுதல் தலைமை இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் அடுத்த ஏழு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தொடர்ந்து மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மற்றும் வங்கக்கடல் பகுதிகளிலும், தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளிலும் 45 முதல் 55 கிலோமீட்டர் வேகம் வரை எட்டக்கூடிய சூறாவளி காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை மாநகராட்சி சார்பில் தெருநாய்கள் கணக்கெடுக்கும் பணிக்கான பயிற்சியினை ஆணையர் திரு ராதாகிருஷ்ணன் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் 50 சதவீத மானியத்துடன் கூடிய மின்சாரத்தால் இயங்கும் புல் நறுக்கும் கருவி வழங்கும் திட்டத்தில் விவசாயிகள் சேர்ந்து பயனடையுமாறு ஆட்சியர் திரு ஸ்ரீதர் கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------------------

தருமபுரி புறநகர் பேருந்து நிலையத்தில் வழித்தட நீட்டிப்பு மற்றும் தடம் மாறுதல் செய்யப்பட்ட ஐந்து வழித்தடங்களில் பேருந்து சேவைகளை ஆட்சியர் திருமதி சாந்தி இன்று தொடங்கிவைத்தார்.

-------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில் 33 மாற்றுத்திறனாளிகளுக்கு சுமார் 4 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு தர்பகராஜ் வழங்கினார்.

-----------------

கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் தேசிய அடையாள அட்டை வைத்துள்ள 25 மாற்றுத்திறனாளிகளுக்கு 13 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி சரயூ இன்று வழங்கினார்.

----------------------

குடிநீரை காய்ச்சி பருகுவதன் மூலம் அமீபா வைரஸ் நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம் என தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை நுண்ணுயிர் பிரிவு பேராசிரியர் டாக்டர் ஜெயமுருகன் கூறியுள்ளார்.

-----------------

நாமக்கல் மாவட்டத்தில் உணவு பாதுகாப்புத்துறையினர் மேற்கொண்ட சோதனையில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்த கடைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

-------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி மூவாநல்லூர் அரசு தோட்டக்கலை பண்ணையில், குடவாசல் அரசு பள்ளி மாணவ, மாணவியருக்கு தோட்டக்கலை பயிர்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான பண்ணை சுற்றுலா இன்று நடைபெற்றது.

-------------

கரூர் மாவட்டம் குளித்தலை கீழதண்ணீர் பள்ளி அருள்மிகு ஸ்ரீ மகா காளி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் திண்டுக்கல் - சேலம் அணிகள் மோதுகின்றன.

சேலத்தில் இப்போட்டி இரவு மணி 7-15-க்கு தொடங்குகிறது.

<<<<<END>>>>>>